[illegible]

V2:1,5
N59
18185

# குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு வசதி

©
GOVERNMENT OF MADRAS
1959

சாங்க செய்தித் துறை வெளியீடு.

181855

# முன்னுரை

"சிறுகக்கட்டிப் பெருக வாழ்"—தமிழ் நாட்டில் இப் பழமொழியை கேட்டிராதவர் இரார். வீட்டைப் பெரிதாகக்கட்டி வாழ்க்கையைச் சிறிதாக்கி விடாமல் எச்சரிக்கிறது இப் பழமொழி. வீட்டைச் சிறுகக்கட்டி சிக்கனமாக வாழ முயற்சித்தால் பெருவாழ்வு தானே வந்தடையும். வீடு சிறியதாக இருந்தால் எல்லா இடத்தையுமே சுத்தமாக வைத்துக்கொள்ள முடியும்.

எவ்வளவோ குறைந்த வருமானமுள்ளவர்கள் இந்த வீடு வசதி திட்டத்தினால் பலன் அடைந்திருக்கிறார்கள். இன்னும் ஏராளமானவர்கள் பலனடைய வேண்டுமென்பதே அரசாங்கத்தின் விருப்பம்.

நெறியாளர்,

சென்னை அரசாங்க செய்தித்துறை.

V21,88
1159

# குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு வசதி

வாழ்க்கையில் மிக அத்யாவசியத் தேவைகள் மூன்று. உணவு, உடை இவைகளுக்கு அடுத்தபடியாக இடம் பெறுவது பத்திரமாக சௌகரியமாக வசிப்பதற்கு ஓர் இடம். ஒரு சாண் இடமானாலும் சொந்தத்தில் இருந்தால் அதனால் ஏற்படும் திருப்தியும் நிம்மதியும் அலாதியானது தான். வீடும் அதன் சுற்றுப்புறமும் சுகாதாரமான சூழ் நிலையில் அமைந்திருந்தால் பொது சுகாதாரத்தைப் பற்றி கவலைப்படவேண்டியதேயில்லை. நோயற்ற வாழ்வும் வாழ வேண்டியது அத்தியாவசியமல்லவா ?

நல்ல முறையில் வீடு வசதிகளை அமைத்துக்கொள்ளும் வழக்கம் இந்தியாவில் தொன்மைக் காலம் முதற் கொண்டே இருந்து வருகிறது என்பது சிந்து நாகரிகச் சின்னங்களாகத் திகழும் மொகஞ்ஜதாரோ, ஹாரப்பா ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள இடிபாடுகளிலிருந்து தெரிகிறது. அக்காலத்தில் கட்டப்பட்ட இந்த வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டவை. அக்காலத்திலேயே சுகாதார விஷயத்தை மனதில் கொண்டு வீடுகள் கட்டினர் என்பது சாக்கடைகள் கட்டப்பட்டிருப்பதிலிருந்து தெரிந்துக்கொள்ளலாம். ஆனால் இப்போது இருந்துவரும் வீடுகளில் பெரும் பாலானவை தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்கதாக இல்லாததுடன் நல்ல காற்றோட்டமில்லாதவைகளாகவும் இருக்கின்றன. கிராமாந்திரங்களில் வெளிச்சத்திற்கும் காற்றுக்கும் பஞ்சமா ? அப்படியிருந்தும் அங்குள்ள



பொள்ளாச்சி நகராட்சியினர் தங்கள் சிப்பந்திகளுக்கு கட்டிக்கொடுத்துள்ள வீடுகள். ஒரு வீடு கட்ட ஆன செலவு ரூ. 2,600.


வீடுகள் சுகாதாரக் குறைவாக விளங்குகின்றன. இதற்குக் காரணம் விஷயம் தெரியாததாக இருக்கலாம். வறுமை அல்லது பழங்காலத்திலிருப்பதை மாற்றி அமைக்க வேண்டாம் என்ற மனப்பான்மை இவைகளில் ஏதாவ தொன்ருக இருக்கலாம்.

இன்றுள்ள நிலைமையில் ஜனத்தொகை அதிகரித்து வருகிறது. குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு அதிக வாடகை கொடுக்க சக்தி இல்லை. அப்படி கொடுத்தும் வசதியற்ற சுகாதாரக் கேடான இடங்களில் வசிக்க வேண்டிய நிலைமையே பல இடங்களில் இருந்து வருகிறது. சுத்தமான இடத்தில் வசிக்கவேண்டும். நல்ல காற்று வசதி இருப்ப துடன், குளிக்கவும் மலஜலம் கழிக்கவும் வசதியும் இருந்து




அந்த இடங்கள் மிக சுத்தமான நிலையில் இருக்க வழி செய்தால் நோய் வாய்ப்படும் வாய்ப்பு மிகவும் குறைந்து போகும்.

**நெருக்கடி அதிகரிப்பு.**—வீடு வசதிப் பிரச்னை சென்ற 20 ஆண்டுகளில் குறிப்பாக நகரப் பகுதிகளில் மிக நெருக்கடியடைந்துவிட்டது. ஒவ்வொருவரும் அவர் எந்த வாழ்க்கைத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி இந்த சங்கடத்துக்குட்பட்டவர்களாக இருக்கிருர்கள். குறைந்த வருமானக்காரர்களுக்கு இந்த சங்கடங்கள் அதிகம். ஸ்தல ஸ்தாபனங்களின் ஊழியர்கள் அரசாங்க உதவியின்றி தாங்களாக வீடு கட்டிக்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர். அவர்களுக்கு வீடு வசதி செய்வதற்காக



கோபிசெட்டிபாளையம் நகராட்சி இம்மாதிரி மூன்று வரிசை வீடுகள் கட்டியுள்ளனர். ஒவ்வொரு வரிசையிலும் 10 வீடுகள். ஒரு வீட்டின் வாடகை ரூ. 7·50.



மதுரை நகராட்சியினரால் கட்டப்பட்ட வீடுகள். இரு வீடுகள் கொண்ட ஒரு பிளாக் கட்ட ஆன செலவு ரூ. 3,000.

அரசாங்கம் குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடு வசதித் திட்டம் என்று ஒரு திட்டத்தை வகுத்து ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்தது.

மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவும் நாடு சுபிட்சமடையவும் இந்த வீடு வசதி முக்கியமான அம்சமாக இருப்பதை உத்தேசித்து திட்டக் கமிஷன் முதல் ஐந்து வருஷ திட்ட காலத்தில் மான்யமாக தர இந்திய சர்க்கார் ரூ. 38·5 கோடி ஒதுக்கவேண்டும் என்றும் ராஜ்யங்கள் தங்கள் பங்குக்கு ரூ. 10·19 கோடி ஒதுக்கவேண்டும் என்றும் நிர்ணயித்தது.

வீடு வசதி செய்து தரும் பொறுப்பு ராஜ்ய சர்க்கார்கள்; ஸ்தல ஸ்தாபனங்கள் இவைகளின் பொறுப்பாகும். தனிப்பட்ட தொழிலாளிகளுக்கு இவ்வசதி செய்து தருவது முதலாளிகளின் பொறுப்பாகும். இந்த வசதிகள் செய்து தரவேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்தே இந்திய சர்க்கார் இதில் விசேஷ அக்கறை காட்ட முன் வந்தது.



ராஜ்ய அரசாங்கம் நீண்ட காலமாகவே கூட்டுறவு சங்கங்கள் மூலமும் ஸ்தல ஸ்தாபனங்கள் மூலமும் வீடு வசதி திட்டங்களுக்காக நிதி கடனுதவி அளித்து வருகிறது. பல்வேறு வீடு வசதித் திட்டங்களை திட்டமிடவும் ஒழுங்கு படுத்தி இணைக்கவும் ராஜ்ய வீடு வசதி ஸ்தாபனம் ஒன்றை நியமிக்க அரசாங்கம் உத்தரவிட்டது. நாளாவட்டத்தில் அதை சட்டப் பூர்வமான ஸ்தாபனமாக்கவும் உத்தேசிக்கப் பட்டது. இந்த ஸ்தாபனம் முழு மூச்சுடன் வேலை செய்ய ஆரம்பிக்கும்போது வீடு வசதித் திட்டத்தில் இன்னும் அதிக வசதிகளை எதிர் பார்க்கலாம்.



கோடைக்கானலில் குறைந்த வருமான ஊழியர்களுக்கான வீடுகள் முன்தோற்றம்.



கோடைக்கானலில் குறைந்த வருமான ஊழியர்களுக்கான வீடுகள் பின்தோற்றம்.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.**—நாட்டின் வீ[illegible] பற்றுக்குறையை நீக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் இரு முறையில் அமுலாக்க உத்தேசித்துள்ளது. சென்னை போன்ற ஜன நெருக்கடியான நகரத்தில் வீடு அமைக்கும் திட்டமும் சுகாதாரக் கேடான பகுதிகளை ஒழிக்கும் திட்டமும் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். திட்டத்தில் வீடுவசதி திட்டத்திற்காக ரூ. 286·67 லட்சமும் சுகாதாரக்கேடான பகுதிகளை ஒழிக்கும் திட்டத்திற்கு ரூ. 168 லட்சமும் நிதி வசதிசெய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களிலுள்ள மூன்று பிரிவுகளில் ஒன்றுதான் குறைந்த வருமானக்காரர்களுக்கான வீடு வசதித் திட்டம். இது



இந்திய சர்க்காரின் திட்டமாகும். இது 1954-ல் ஆரம்பிக்கப்பட்டது. நீண்ட கால தவணைகளில் கடன் உதவி அளிப்பதன் மூலம் வீடு கட்டிக்கொள்ள வசதிசெய்வது இதன் நோக்கம்.


குறைந்த வருமானக்காரர்களுக்கான வீடு வசதித் திட்டம் பின்கண்ட அம்சங்களைக் கொண்டது :—

1. நகரப் பகுதிகளில் வீடுகள் (கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்.)
2. சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்ட்.
3. உள்ளூர் மன்றங்கள்.
4. சென்னை மாநகராட்சி.

V2 11,88

முக்கிய அம்சங்களும் குறிக்கோள்களும் பின் வருமாறு :—

1. **கூட்டுறவு சங்கங்கள்.**—நகரப் பகுதிகளில் வீடு வசதி கூட்டுறவு சங்கங்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட



கோவை நகராட்சியினர் கட்டியுள்ள வீடு ஒன்றின் [illegible]

18855



தூத்துக்குடி நகராட்சியினர் கட்டியுள்ள வீடுகள். ஒரு வீடு கட்ட ஆன செலவு ரூ. 2,800.

காலத்திற்கு முன்பே சென்னை மாநிலத்தில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருபத்தி இரண்டு கூட்டுறவு சங்கங்களும் 1,300 வீடுகளும் அமைக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. நகரங்களில் வீடு வசதித் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 82·31 லட்சம் வகை செய்யப்பட்டிருக்கிறது.

1956–57-ல் 4 கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை 172 வீடுகளை ரூ. 16 லட்சம் செலவில் கட்டி முடித்தன.

1957–58-ல் ரூ. 20·55 லட்சம் பட்ஜெட்டில் ஒதுக்கப் பட்டது. 1958-ம் ஆண்டு மார்ச்சு மீ 31 உ வரை கட்டப்பட்ட வீடுகள் எண்ணிக்கை 282. கட்டி முடிக்காத வீடுகள் எண்ணிக்கை 583.

1958–59-ம் ஆண்டில் சுமார் 5 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கவும் 350 வீடுகள் கட்ட ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது.



**2. நகர அபிவிருத்தி டிரஸ்ட்.**—ரூபாய் 30 லட்சம் கடன் உதவி செய்து 375 வீடுகளை நகர அபிவிருத்தி டிரஸ்ட் கட்டி முடித்திருக்கிறது. (1955-56-ல் அனுமதிக்கப்பட்டது ரூ. 12 லட்சம். 1956–57-ல் அனுமதிக்கப்பட்டது ரூ. 18 லட்சம்.

தவணை முறைகளில் 373 கட்டிடங்கள் கட்டி முடிந்த பின் ஒதுக்கப்பட்டவர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டிருக்கின் றன. 1955–56, 1956–57-ல் இந்திய சர்க்கார் இத்திட்டத் திற்காக ரூ. 4·24 லட்சம் ஒதுக்கினர். 174 மனை நிலங்கள் (கிரவுண்ட்) வாங்கி வீடு கட்ட ஒதுக்கப்பட்டது. 27 வீடுகள் கட்டிய பின் மற்ற நிலங்கள் வீடுகள் கட்ட விற்கப்பட்டன.

இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் ஒதுக்கிய ரூ. 80 லட்சத்தில் ரூ. 56 லட்சம் வீடுகள் கட்ட உபயோகப் படுத்தப்படும். பாக்கியுள்ள ரூ. 24 லட்சம் மனை நிலம் வாங்க உபயோகிக்கப்படும்.)



சென்னை கோடம்பாக்கத்திற்கருகிலுள்ள புலியூரில் கட்டப்பட்ட வீடுகள்

1957–58, 1958–59-ல் 1,080 மனை நிலங்கள் வரை வாங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

**3. உள்ளூர் ஆட்சி மன்றங்கள்.**—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு 5 உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு ரூ. 13·41 லட்சம் உதவி அளிக்கப்பட்டது. 1956–57-ல் 7 உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு 236 வீடுகள் கட்ட ரூ. 6·94 லட்சம் கடன் உதவி அளிக்கப்பட்டது. 1956–57, 1957–58 வருஷங்களில் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 648 ஆகும். 1959-ல் உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு ரூ. 3·50 லட்சம் கடன் உதவி அளிக்கப்படும். 110 வீடுகள் கட்ட 6 உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கிடையே இது விநியோகிக்கப்படும்.

**4. சென்னை மாநகராட்சி.**—இத்திட்டத்தின் கீழ் ரூ. 15 லட்சம் சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்ட ஆரம்பத்திற்கு முன் 90 வீடுகள் கட்ட ரூ. 5 லட்சம் கடன் உதவி அளிக்கப்பட்டது. இந்த வீடுகள் எல்லாம் 1957–58-ல் கட்டி முடிக்கப்பட்டன. 1957–58-ல் 43 வீடுகள் கட்ட ரூ. 3·25 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1958-ம் ஆண்டு மார்ச்சுமீ 31உ வரை ரூ. 0·81 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1958–59-ல் ஷெனாய் நகர் பகுதியில் 36 வீடுகள் கட்ட ரூ. 2·50 செலவிடப்பட்டது. இவ்வேலை சீக்கிரமே மேற்கொள்ளப்படும்.

1957–58-ல் ரூ. 11·39 லட்சம் இந்த டிரஸ்டுக்கு விநியோகிக்கப்பட்டது. வீடுகள் கட்ட நிலங்களை வாங்கும் திட்டங்கள் நான்கும், வீடுகள் கட்டும் ஒரு திட்டமும் அரசாங்கத்தினரால் அங்கீகரிக்கப்பட்டது. இதற்காக ஆகும் மொத்த செலவு ரூ. 32·70 லட்சம். நிலங்களை ஆர்ஜிதம் (கைப்பற்றும்) வேலையை அமுல் நடத்துவதில் ரூ. 8·50 லட்சம் விநியோகிக்கப்பட்டது.



1958–59-க்கு மேற்கண்ட 5 திட்டங்களை அமுல் நடத்துவதற்காக ரூ. 17·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 167 வீடுகள் கட்ட ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதும் இதில் சேர்ந்ததாகும்.

## திட்டத்தின் முழு விவரம்

வருஷத்தில் ரூ. 6,000-க்கு மேற்படாமல் வருமானம் கிடைப்பவர்கள் வசதி பெறவேண்டும் என்பதற்காகவே இத்திட்டம் வகுக்கப்பட்டது. ஜில்லா போர்டுகள், நகராட்சிகள், பஞ்சாயத்துகள் ஆகிய ஸ்தல ஸ்தாபனங்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் தொகை பெற்று தங்களிடம் வேலை பார்க்கும் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வாடகைக்கு விடலாம், குறைந்த வருமானமுள்ள வெளி ஆட்களுக்கும் வாடகைக்கு விடலாம், தவணை முறைகளில் விற்கவும் செய்யலாம். ஸ்தல ஸ்தாபனங்கள் வீடு கட்டும் இடங்களை வாங்குவதற்கு கடன் தொகை அளிக்கப்படும். வாங்கிய இடம் (இடங்களை வீடுகட்ட) விரும்பும் தங்கள் சிப்பந்திகளுக்கோ அல்லது பொது மக்களுக்கோ வீடு கட்டிக் கொள்ள, லாபமுமில்லை நஷ்டமுமில்லை என்ற அடிப்படையில் விற்கலாம்.

ஏராளமான ஸ்தல ஸ்தாபனங்கள் இத்திட்டத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. வீட்டின் மதிப்பு, நிலம் உள்பட சேர்ந்து எவ்வளவு ஆகிறதோ அதில் 80 சத விகிதம், உயர்ந்த பட்ச அளவு ரூ. 8,000-க்கு மேற்படாமல் கடன் உதவி ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தரப்படுகிறது. ஸ்தல ஸ்தாபனங்கள் தாங்கள் கட்டும் வீடுகளில் 25 சத விகிதத்தை தங்கள் சிப்பந்திகளுக்காக ஒதுக்கலாம். மற்ற 75 சத விகிதத்தை, குறைந்த வருமானமுள்ள பொது மக்களுக்கு ஒதுக்கவேண்டும். வீடு நிலம் இரண்டையும் சேர்த்தே கணக்கிட்டு கடன் உதவி அளிக்கப்படுகிறது.

வீடுகள் கட்டித் தருவதற்காக வாங்கும் கடன் தொகையை வட்டியும் 30 தவணைகளுக்கு மேற்படாதபடி சரிசமத் தொகையாகப் பிரித்து திருப்பித்தர வேண்டும். நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வாங்கிய தொகைகளை மூன்று தவணைகளில் வருஷத்திற்கு ஒன்றாக திருப்பித்தர வேண்டும்.

இத் திட்டத்தின்கீழ் குறைந்த சம்பளம் பெறும் ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் மாதம் ரூ. 10 அல்லது ரூ. 20 வாடகைகளில் நல்ல முதல் தரமான காற்றோட்டமுள்ள வீடுகளில் வசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர்.

1955-56-ல் 518 வீடுகளை பின் கண்ட ஸ்தல ஸ்தாபனங்கள் கட்டியுள்ளன :—

| | | வீடுகள் |
|---|---|---|
| 1. மதுரை நகராட்சி | .. .. | 216 |
| 2. கோயமுத்தூர் நகராட்சி | .. | 170 |
| 3. சேலம் நகராட்சி | .. | 60 |
| 4. கோபிசெட்டிபாளையம் நகராட்சி | | 30 |
| 5. பொள்ளாச்சி நகராட்சி | .. | 42 |
| மொத்தம் | .. | 518 |

1956–57-ல் 7 ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கடனுதவி அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் 5 நகராட்சிகள், 1 ஜில்லா போர்டு, 1 பஞ்சாயத்து. இவை 395 வீடுகளை பின் கண்ட விவரப்படி கட்டின :—



| | | வீடுகள் |
|---|---|---|
| 1. கோடைக்கானல் நகராட்சி | .. | 12 |
| 2. மன்னார்குடி நகராட்சி | .. | 36 |
| 3. ஈரோடு நகராட்சி | .. .. | 66 |
| 4. திருநெல்வேலி நகராட்சி | .. | 12 |
| 5. திருச்சிராப்பள்ளி நகராட்சி | .. | 60 |
| 6. ராமநாதபுரம் ஜில்லா போர்டு | .. | 200 |
| 7. வால்பாறை பஞ்சாயத்து | .. | 9 |
| மொத்தம் | .. | 395 |

1957–58-ல் பின்கண்ட ஸ்தல ஸ்தாபனங்களுக்கு 236 வீடுகள் கட்ட கடன் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது :—

| | | வீடுகள் |
|---|---|---|
| 1. மதுரை ஜில்லா போர்டு | .. .. .. | 50 |
| 2. தூத்துக்குடி நகராட்சி | .. .. .. | 20 |
| 3. அரக்கோணம் பஞ்சாயத்து | .. .. | 20 |
| 4. விருதுநகர் நகராட்சி | .. .. .. | 26 |
| 5. திருப்பூர் நகராட்சி | .. .. .. | 28 |
| 6. கூனூர் நகராட்சி | .. .. .. .. | 92 |
| மொத்தம் | .. | 236 |

1958–59-ல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வீடு கட்டவும், நில ஆர்ஜிதம் செய்யவும் உதவுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3·50 லட்சம். இத்தொகை 110 வீடுகள் கட்டுவதற்காக 6 ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உதவப்படும்.

ஸ்தல ஸ்தாபனங்கள் இத்திட்டத்தைப் பெரிதும் வரவேற்றுப் பயன்படுத்துகின்றன. போதிய நிதி இல்லாத குறையால் இதர ஸ்தல ஸ்தாபனங்கள் இந்த திட்டத்தை பூரணமாகப் பயன்படுத்திக்கொண்டு வீடுகள் கட்டித்தர முடியவில்லை. கிராமங்களில் வீடு கட்டுவதும் உடனடியான தேவையாக இருந்து வருகிறது. கிராமப்புனருத்தாரணம் செய்வதுடன் கிராம மக்கள் நகர்ப்புறங்களுக்கு குடியேறுவதை நிறுத்துவதை வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் மூலம் செய்ய முடியும்.

## சில நகராட்சிகளின் வீடு வசதித் திட்ட விவரம்.

**மதுரை நகராட்சி.**—108 பிளாக்குகள் அல்லது 216 வீடுகள் கட்ட ஆன மொத்த செலவு சுமார் ரூ. 7 லட்சம். இரு வீடுகள் கொண்டது ஒரு ' பிளாக் ' இதற்கு ஆன செலவு ரூ. 6,000. ஒவ்வொரு ' பிளாக் ' இன் பரப்பளவு 50' 40'.

பின்கண்ட மூன்று இடங்களில் இந்த வீடுகள் கட்டப் பட்டன :—

1. ஞான ஒளிவு புரம்—168 வீடுகள் கொண்டு 84 பிளாக் கள்.

2. சுப்பிரமணியபுரம்—16 வீடுகள் கொண்டு 8 பிளாக் கள்.

3. கிழக்கு விஸ்தரிப்பு—32 வீடுகள் கொண்டு 16 பிளாக் கள்.

**கோபிச்செட்டிபாளையம் நகராட்சி.**—1957–58-ல் கட்டப் பட்டவை 10 யூனிட்டுகள் கொண்டு 3 பிளாக்கள் (மொத்தம் வீடுகள் 30). ஒவ்வொரு யூனிட்டின் விவரம். முன் வராந்தா 12 '4'. ஒரு வசிக்கும் அறை 12' 10'. ஒரு சமையலறை 12' 8'. ஒரு புழக்கடை குளிக்கும் அறை சுற்றுப்புறச் சுவர் கொண்டது 12' 10'

மூன்று யூனிட்டுகளுக்கு சுகாதார வசதி ஏற்பாடுகள் உள்பட ஆன செலவு ரூ. 57,302-10-0. ஒரு யூனிட்டின் வாடகை ரூ. 7·50.

**கோடைக்கானல் நகராட்சி.**—குமாஸ்தாக்கள், சேவக ஊழியர் செய்பவர்கள் இவர்களுக்காக வீடுகள் கொண்ட பிளாக்குகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. மொத்த வீடு களின் எண்ணிக்கை 12.

**பொள்ளாச்சி நகராட்சி.**—உடுமலைப்பேட்டை பாதையில் நகர எல்லைக்குள்ளாகவே குறைந்த வருமானமுள்ளவர்களுக்கான



வீடுகள் கொண்ட காலனி அமைக்கப்பட்டுள்ளது. இதில் 42 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் 18' 10' விஸ்தீரணமுள்ள ஹால், இருபுறமும் முறையே 18' 4,' 18' 6' விஸ்தீரணமுள்ள வராந்தாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பின்புறமுள்ள வராந்தாவின் ஒரு பகுதி சமயலறைக் காக தடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள இடம் உணவருந்தும் அறையாக உபயோகிக்கலாம். ஒவ்வொரு வீட்டிற்கும் தனி மீட்டர்வைத்து மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது. இக்கால னியில் ஒரு கிணறும் வெட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் தனி குளிக்கும் அறை, கக்கூஸ் அமைக்கப் பட்டிருக்கிறது. ஒரு வீடு கட்ட ரூ. 2,600 செலவாயிற்று.

**தூத்துக்குடி நகராட்சி.**—தூவேபுரத்தில் 20 வீடுகள் கட்டப் பட்டன. ஒரு வீட்டுக்கு, கக்கூஸ் மின்சார வசதி உள்பட செலவான தொகை ரூ. 2,800. மேல்தளமும் ஓடுகள் மூடப்பட்ட தாழ்வாரமும் கொண்டது.

GOVERNMENT PRESS MADRAS